HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2017 செப்டெம்பர் – ஒக்டோபர் இதழ்

"...மனிதன் நிலத்திற்கே உரிமையானவன். அனைவரும் இரத்த உறவுகளால் ஒன்றிணையாத போதும் மற்றைய அனைத்து விதங்களிலும் ஒத்தே காணப்படுகின்றான். வாழ்க்கை சக்கரத்தை தீர்மானிப்பது மனிதன் அல்ல. ஆனால் அந்த சக்கரத்தை சார்ந்த பல விடயங்களை அவனால் செய்ய முடியும்..."

சிவப்பிந்தியர்களின் தலைவர் சியடல் பல ஆண்டுகளுக்கு முன் கூறிய இந்த கருத்தானது அன்றைய காலக்கட்டத்திற்கு பொருந்தியதை விட தற்போது சிறப்பாக பொருந்துகின்றது. ஏனென்றால் இந்த பெரும் பூமிக்கு நாம் செய்யும் தீங்குகளினாலேயே ஆகும். இந்த தீங்குகளை தடுப்பதற்கு மற்றையவர்கள் பக்கம் விரல்களை நீட்டாமல் நாமே முன் நின்று செயல்களை செய்ய வேண்டும். முடிந்த அளவிற்கு பொலித்தீன் பாவனையை குறைப்போம். அது நமது சாப்பாடு பொதி தொடக்கம் அனைத்திலும் செய்ய எத்தனிப்போம். கிராமின் நாங்கள் இந்த பூமியை பாதுகாக்க நம்மால் இயன்றளவு எங்கள் கடமைகளை செய்வோம்.

**ஆம்... அதை எங்களால் செய்யமுடியும்...!**





சுற்றாடல்
பாதுகாப்பிற்காக...
**பொலித்தீன்களை**
தடுப்பதற்கான
**புரட்சியை...**
HNB கிராமின்
நாங்கள்
ஆரம்பித்து விட்டோம்.



# வெடிகுண்டு ஒப்பந்ததாரரின் மகனான நொபெலின் இறுதி ஆசை



## வாழ்க்கையின் அர்த்தம்


இம்மானுவேல் நொபெல் என்பவர் வெடிகுண்டு தயாரிப்பதில் சிறப்புத்தேர்ச்சிப் பெற்றவர். அவரது மகனின் பெயர் எல்பரட் நொபெல். இவர் 1833 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி சுவீடனின் ஸ்டொக்ஹோம் நகரில் பிறந்தவர். எல்பரட் பிறக்கும் போது தனது குடும்பமானது பொருளாதார நெருக்கடிக்கு இடைப்பட்டிருந்தது. இந்நிலைமையானது எல்பரட்க்கு 9 வயதாகும் வரையில் நீடித்தது. ஆனால் இந்நிலை 1942 ஆம் ஆண்டு மாறியது. இதற்கு காரணம் ரஷ்ய அரசு வெடிகுண்டு தயாரிப்பதற்கான ஒப்பந்தமொன்றினைப் பெற்றுக் கொடுத்தது. இத்துடன் தன்னோடு முழுக் குடும்பமும் 1842 இல் ரஷ்யாவில் குடியேறியது. இதன் காரணத்தினால் எல்ப்ரட் இரசாயன வியலில் தனது கல்வியைத் தொடர முடிந்தது.



பின்னர் எல்ப்ரட் தனது மேற்படிப் பினைத் தொடருவதற்காக அமெரிக்காவிற்குச் சென்றார். நீண்ட காலத்தின் பின் மறுபடியும் ரஷ்யாவிற்குச் சென்ற எல்ப்ரட்டுக்கு 1859 இல் ரஷ்யாவின் குடியமர வேண்டி ஏற்படுகின்றது. இதற்கு காரணம் ரஷ்யா, க்ருமியா நாட்டோடு புரிந்த யுத்தம் முடிவுற்றதனால் ஆகும். பின்னர் தந்தையும், இரண்டு பிள்ளைகளும் சுவீடனுக்கு மீண்டும் வந்து வெடிகுண்டு தயாரிப்பு தொழிற்சாலையொன்று ஆரம்பித்து நடாத்திச் சென்றதோடு அங்கு நடந்த விபத்தொன்றினால் எல்ப்ரட்டின் சகோதரர் இறந்தார். இச்சம்பவத்தினால் இவரது தந்தை சுகவீனமுற்றார். அத்தோடு சுவீடன் அரசு இவ்வியாபாரத்தினை தடைசெய்யுமாறு ஆணையிடப்பட்டது.

அரசு தடைவிதித்ததினால் எல்ப்ரட் மீண்டும் பொருளாதார சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எனவே இவர் மீண்பிடித்தல் துறை தொடர்பான உற்பத்திகளை தயாரிக்கும் தொழிற்சாலை என்கிற பெயரில் வெடிகுண்டு தயாரிப்பதற்கான பரிசோதனைகளில் ஈடுபட்டார். அதன் பலனாக 1866 இல் டைனமைட் என்கிற வெடிகுண்டு மருந்தானது உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இது முதன் முதலில் டைனமிக் என்கிற பெயராலேயே அழைக்கப்பட்டது. அது கிரீஸ் நாட்டின் மொழியில் இராணுவம் என்று பொருள்படும். பின்னர் அல்ப்ரட்டால் டைனமைட் என்று அழைக்கப்பட்டது.
இக்கண்டுபிடிப்புக்காக ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரித்தானிய பேடன்ட் அனுமதிப்பத்திரத்தினை எல்ப்ரட் பெற்றுக் கொண்டார். பிறகு இவர் பல்வேறு நாடுகளில் வெடிகுண்டு தொழிற்சாலைகளை ஆரம்பித்தார்.

இவரது விடாமுயற்சியினால் நைட்ரோ செலியுலஸ், ஜெலட்டின், ப்ளாஸ்டின் போன்ற வெடிகுண்டு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவரது இறுதி காலத்தில் டைனமைட் தயாரிப்பில் வெறுப்பு ஏற்பட்டது. அதன் பிரதிபலனாக அவர் தனது சொத்தின் பெரும்பகுதியை சமூகச் சேவைக்காக கொடையாக வழங்கினார். டைனமைட் மற்றும் ஏனைய வெடிகுண்டு மருந்துகளின் உபயோகத்துடன் பல்வேறு யுத்தங்கள் இடம் பெற்றதனையும் அதில் பாதிக்கப்பட்ட குழந்தைகளை எண்ணியும் எல்ப்ரட் தனது இறுதிக்காலங்களில் மிகவும் வருந்தினார். மனதளவில்





பாதிக்கப்பட்டார். இவ்வெடிகுண்டு தயார்ப்புக்களால் சேர்த்துக் கொண்ட சொத்து மதிப்புகளில் டொலர் மில்லியன் 9 சுவீடன் வங்கியொன்றில் கணக்கிலிடப்பட்டது. பின்னர் அவர் 1886 இல் இறந்தார். இறக்கும் தருவாயிலிருந்த அவர் தனது இறுதி ஆசையினையும் எழுதினார். அதாவது டொலர் மில்லியன் 9 இற்கு கிடைக்கும் வட்டிப்பணத்தை உலக மக்களின் நன்மைக்காக போராடுபவர்களுக்கு வழங்குமாறு கூறப்பட்டிருந்தது.

அதாவது அவர் பின்வருமாறு வகைப்படுத்தியிருந்தார். பௌதிகவியல், இரசாயனவியல், மருத்துவவியல், இலக்கணம், உலக சமாதானம் போன்ற துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு அப்பணத் தொகையினை வழங்குமாறு குறிப்பிட்டிருந்தார். உலகப் பிரசித்திப்பெற்ற நொபெல் புலமைப்பரிசில் பெறுவோர்



உருவாகுவது நொபெல் உருவாக்கிய இந்நற்பணியினாலேயாகும். இந்நிதியானது நொபெல்லின் பெயராலேயே அழைக்கப்படுகின்றது. இதனால் நன்மையடைவோர் பலர். இப்பொழுது நற்பணியினை சுவீடன் மற்றும் நோர்வே நாட்டினரே கையாள்கின்றனர். நொபெல் சிறப்பு விழாவானது ஒவ்வொரு வருடந் தோறும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறுகின்றது. 1900ஆம் ஆண்டு முதல் நொபெல் நற்பணி மன்றம் தனது சேவைகளை வழங்குகின்றது. உலக அழிவிற்கு வழிகோர்த்த நொபெல் என்கிற நபரால் தனது பாவத்திற்கு பரிகாரமாக நொபெல் நற்பணி மன்றம் ஆரம்பிக்கப் பட்டமையால் அவரது கதாபாத்திரம் தொடர்பிலான அமைப்பு 360 வீதம் மாறியது. இதனால் நொபெல் அனைவரது அன்பினையும், ஆதரவினையும் பெற்றார். இதனைப் போலவே நாமும் நம் தாய் நாட்டை நேசிக்க வேண்டும். நாட்டிற்கு எம்மால் ஏதாவதொரு நற்பணியைச் செய்ய வேண்டும். நாட்டின் அபிவிருத்திக்கு எம்மால் இயன்ற உதவியை, பங்களிப்பை வழங்க வேண்டும் நாமும் எமது பொறுப்புக்களை உணர்ந்து நடப்போம்.


பிரேமசிறி கமகே
தலைவர், வியாபார அபிவிருத்தி கேந்திரம்



## கிராமினின் ஊழியர் சேவையாளர் அர்ப்பணிப்பு கீதம் முடிவுற்ற விதம்

# எங்கள் இரண்டாம் வீடு

இருளை அகற்றிடும் உன்னத சேவையில்
அன்னையே எங்கள் இதய கௌரவம்
ஆசியெல்லாம் என்றும் நிலையாக
வந்துசேர்ந்திடும் நமது இல்லமே

மழைநீரில் நான் நனையவில்லை
வியர்வைத்துளியினால் உள்ளம் நனைந்ததே
புழுதியில் நான் மறைந்திடவில்லை
சிரிப்பினில் நாம் செழிப்படைந்திட்டோம்.

சிறியமனிதரைத் தேடிச்சென்ற நாம்
பெரிய மனிதராய்ப் பிறந்திட்டோம்
புதிய மனிதராய் ஆன நாமெல்லாம்
நல்ல நோக்குடன் வாழுவோம்.









# பாடலின் கதை

கிராமின் நிறுவனத்தில் பணிபுரிபவர்கள் தங்களது தொழில் துறையில் மாத்திர மல்லாது ஏனைய கலை சார்ந்த துறை களில் ஆர்வம் மிக்கவர்களுடன் சிறந்த திறன்களையும் படைத்தவர்கள் என்றே கூற வேண்டும். அவ்வாறானதொரு ஆற்றல் மிக்கவரே அமில நிதஹச. "அந்துர துரலன சொந்துரு..." என்கிற பாடலுக்கு சொந்தக்காரரும் அவரே. இப்பாடலின் வரலாறு மிகவும் சுவாரஸ்யம் மிக்கது. இது பற்றி அமில எம்மிடம் கூறிய போது, Great Place to Work என்கிற விருது விழாவிற்கு 2 - 3 நிமிடங்களைக் கொண்ட வீடியோ ஒன்றினை முன் வைப்பத்கு HNB கிராமின் நிறுவன முகாமைத்துவ பணிப்பாளருக்கு தேவைப்பட்டது. இது தொடர்பில் தயாரா வதற்கு ஓரிரு நாட்களே எம்மிடம் இருந்தது. இதைப் பற்றி உரையாடு வதற்கு HNB கிராமினிற்கு செல்லும் ஒவ்வொரு வேளையும் நான் கண்ட ஒரு விடயம் அங்குள்ள முகாமையாளர் முதல் ஊழியர் வரையிலான அனைவரிடமும் இருந்த நட்புறவு. எனவே, இச்செயற் பாட்டினை நினைவில் கொண்டே நான் இப்பாடலை தயாரித் தேன். பாடல் வரிகளை வாசித்த HNB கிராமின் முகா மையாளர் அதன் மீது ஆர்வம் ஏற்பட்டு சிறந்த முறையில் ஒளிப்பதிவுகளையும் காட்சிகளையும் தயார்படுத்துமாறு கூறினார்.

கிராமின் நிறுவனத்தின் தியாகம், பொறுப்புணர்ச்சி, கடமைகள், வாடிக்கையாளர்களுட னான நட்புறவு மற்றும் சமூகம் பற்றிய கண்ணோட்டம் தொடர்பான விடயங்கள் இப்பாடலில் உள்ளடங்கியுள்ளதை இந்நிறுவன முகாமையாளர் உணர்ந்துள்ளார் என்றே நான் கூறுவேன். ஆகவே இப்பாடலினை விருது வழங்கும் விழாவிற்கு கொடுப்பதை விட தமது நிறுவன ஊழியர்களுக்கு அர்ப்பணிப்பதையே நிறுவன முகாமையாளர் விரும்பினார்.

இப்பாடலுக்கான சகல பொறுப்புக்களும் அமிலவின் "4th February" தயாரிப்பு நிறுவனத்திற்கே வழங்கப்பட்டது. இப்பாடலுக்கான படப்பிடிப்புகளுக்கு திஸ்ஸமஹாராம, நுவரெலியா, ரணால போன்ற பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டன. உரிய கதாபாத்திரங்களை களனி பல்கலைக்கழக விரிவுரையாளர்களே தெரிவு செய்தனர்.

இப்பாடலின் படப்பிடிப்புகளுக்கு உரிய பிரதேச மக்களையும் பங்குபற்ற வைத்துள்ளோம். எவ்வாறாயினும் முழுப்படப்பிடிப்புகளுக் கும் 3 நாட்கள் சென்றன. சமிந்த பிரபாத் அவர்களின் மனதிலுள்ளதை அவ்வாறே இப்பாடல் பிரதிபலித்துள்ளதா கவும் அமில கூறினார். இப்பாடலிலுள்ள தமிழ் வரிகளை நவாஸ் எனொன் தனது அழகிய குரலால் பாடியுள்ளார். தமிழ் பாடல் வரிகள் ரேஸ் என்ட் ரோட்ஸ்ஹி போல் ஜயசீலன் என்பவரால் எழுதப்பட்டது. எனவே இவ் அனைவரது உழைப்பினாலும் உருவான HNB கிராமின் நிறுவனத்தின் ஊழியர் சேவைக்கான அர்ப்பணித்த பாடலின் உரிமை தற்பொழுது உங்களிடம்.



அமில நிதஹச



கலைஞர் – திலங்க

ஆக்கம் :
மஞ்சுள பிரபாத்

# செல்பி எனும் சிற்றின்ப அனுபவம்

## கவிதை சாளரம்





### இமை நின்ற இடங்கள்

புகைப்படம் ஒன்றிற்கு உயிரைக்
கொடுக்க முடியும் என்றால் நண்பரே
உயிர் போன்ற நட்பும் பதிப்போகும்
உன் இந்த செல்பியின் உள்ளே
முகப்புத்தகத்தில் விழுமே
இந்தப் படம் இதனிடையே
லைக் கொமண்ட் ஷெயார் ஆகுமே - இம்முறையும்
போகும் வரும் எல்லா இடத்திலும்
ஒரு முறை எடுப்போம் இதை
சிரிப்பும், அழுகையும் ஒன்று சேர்ந்த
இந்த படத்திலும்
ஒரு இல்லாத நாளிலும் கூட இது இருக்கும் அருகில்
ஞாபகங்கள் இன்று நாம் எடுக்கும்
செல்பிக்கு என்றும் இருக்கும்

நிலின திசாநாயக

### உனக்காகவே

புதிதாய் இருக்கின்றது இந்நிலை
நீதான் என்னை அழகாக்கியது
இது வரை எரியாத என்
விளக்குகள் எரியத்தொடங்கின
என்னிடம் இருந்த துன்பம் எனும் இருள்
நீங்கியது உன் பாசம் எனும் அந்த
ஒளியில்
என்றும் நீ என்னவள்

சில நேரங்களில் உன் அந்த
குழந்தைத்தனம்
என் மனதிற்கு பெரும் பாதிப்பாயிருக்கும்
நான் மது அருந்தி வந்தவுடன்
பதுங்குவாய் சிறு பூனையை போல் ஒரு
மூலையில்
கொஞ்சம் கொஞ்சமாய் காலம் கடந்த
போதிலும்
முன் இருந்த அன்பு அப்படியே
குறைவின்றி என்றும் உனக்கான
உறைவிடமான
என் நெஞ்சம் அதே பசுமையுடன்

பாயில் உறங்கிய பொழுதும் பக்கத்தில்
நீ இருந்தால் பூவில் உறங்கிடும்
உணர்வு எனக்கு
பாவம் செய்த என் கண்களுக்கு
முடியவில்லை எப்பொழுதும்
உன்னை பார்த்திர உறக்கம் எனும்
இருளுக்குள்
மாட்டிக்கொள்ளும் சில நேரம் இருப்பேன்
உன்னவனாய் என்றும் உனக்காக

மெத்ம சுரவியத்த – கண்டி கிளை

### குருவே உனக்காய்

கல்வியின் கடலில் வழியின்றி தத்தளித்த
எம்மை ஓடமாய் வந்து கரையேற்றிய கலங்கரையே
சரி எது பிழை எது என உணரச்செய்து
அனைவரிலும் விழிப்பையேற்றிய தாயே

போகும் வழி தெரியாமல் இருள் நிறைந்த
இந்த பாதையில் முன்னோடியாய் நின்ற சூரியனே
இந்த சுதந்திர வானில் எப்படி பறக்க வேண்டுமென
கற்பித்த என் அன்பு ஞானாசிரியே

நீலவானியைப் போன்ற தெளிவையும்
சூரியனை போன்ற பெரு ஒளியையும் எமக்குள்
வளர்த்த காலத்தின் கதாநாயகியே
கனிந்துகொள்கின்றேன் என் நேரத்தை சதியாக

கடலை போன்ற பாரிய அறிவுக்கடலில்
எல்லாம் முத்துக்குளித்து கண்டெடுத்த
முத்துக்களாய் எம்மை மாற்றிய என்
குருவே உன் நினைவாய் இன்று நான்

எம்ஜான் மதுஷங்க

### எம்மை விட்டு நீங்கிய மகனே...

உலகில் பெரும் பாக்கியம்
தாயாவது என்றாலும்
உன்னை பெரும் அளவிற்கு நான்
புண்ணியம் செய்திருந்தாலும்
என் கண்ணீரை வரவழைத்து
மேகங்களுடன் மறைந்து சென்றவனே
என்றும் நீ இருப்பாய் எம்
நினைவினில் மறைந்திடாத ஒளியாய்

05.08.2017 ஆம் திகதி எம்மை விட்டு பிரிந்த
நண்பனின் மூன்றாம் மாத நினைவிற்காய்

### நீ...

நெஞ்சில் எழுந்திடும்
எல்லா நினைவிலும் உன்
பெயர் இருக்கும்
முன்னே...
நான் எழுதும் கவிதையின்
வரிகளுக்கு உரிமை
கூறும் ஒரே கவிஞன் நீயாக
இருப்பாய் ஏன்? இது
என் வரிகள் உன்
நினைவில் திருடி எடுத்தேன்
என் சிந்தையில்
நீ நின்ற போது அதனாலா?

நதீகா ஸ்ரீமாலி
புத்தளம் கிளை







# நபரொருவரை சுயதொழில் முனைபவராக்குவதற்கு தூண்டும் காரணிகள்





சந்திகெலும் ஜெயதுங்க
கணக்காளர்
எச்.என்.பீ கிராமின்
பினான்ஸ் லிமிட்.

சுயதொழில் முனைபவராவதற்கு நபரொருவர் தன்னுள் உள்நோக்குகின்ற விடயங்கள்


1. தான் புரிகின்ற தொழிலின் தலைவராக தானே இருப்பதன் அவசியம் / அவரே அவருக்கு தலைவராவதன் தேவை.
2. வெவ்வேறு விதமானதும் வித்தியாசமானதுமான நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.
3. தன்னிடமுள்ள அனுபவம், பயிற்சிகள் மற்றும் திறன்கள் என்பவற்றின் மூலம் சிறந்த பயனை பெற்றுக்கொள்ளல்.
4. தனது நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கான சுதந்திரத்தினை ஏற்படுத்திக்கொள்ளல் / சுயாதீனமாக செயற்படல் / முழுச்சுதந்திரம்.
5. புதிய வியாபாரங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கும் பொழுது தோன்றுகின்ற சவால்களுக்கு முகங்கொடுத்தல்.
6. இலக்குகளை அடைவதற்காக இருக்கின்ற சுயவிருப்பு / தன்னிறைவு

சுயதொழிலினை வெற்றிகரமாக்குவதற்கு இருக்க வேண்டிய காரணிகள்

சுயதொழில் முனைபவரது பணியானது சந்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து, வாய்ப்புக்கள் பற்றி தெரிந்துக்கொண்டு அதற்கேற்ற உற்பத்திகளை உருவாக்குதல் ஆகும். அதைப்போலவே சந்தையில் நிலவுகின்ற வெற்றிடத்தினைப் பற்றி தெரிந்துக்கொண்டு, அதை நிரப்பும் வகையிலான உற்பத்திகளைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புதல். இச்செயற்பாடுகள் குறித்த காலப்பகுதிகளிலேயே நடைபெறும். ஆகவே சிறந்த சுயதொழில் முனைபவராவதற்கு சில பிரதான பணிகள் உள்ளன.

1. தனது பலம் மற்றும் பலவீனம் பற்றி தெரிந்து வைத்திருத்தல். (தான் பற்றிய சிறந்த புரிந்துணர்வு)
2. எதிர்காலத் திட்டம் குறித்து திட்டமிட்டு வைத்திருத்தல்.
3. வியாபார யோசனைகளை முன் வைப்பதற்கான சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்ளல். (வணிக வாய்ப்புகள் கொண்டிருத்தல்)
4. நிதி, மானிட, பௌதீக வளங்கள் கொண்டிருத்தல். (வளங்களை நடைமுறைப்படுத்தல்.)
5. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பன வெற்றிகரமாக இயங்குதல்.

ஜெப்ரீ டிமன்ஸ் முன்வைக்கப்பட்டுள்ள கருத்தின்படி குறிப்பிட முடியாத சூழலொன்றில் சுயதொழில் முனைபவரின் வெற்றியை முன்னிட்டு சந்தை வாய்ப்புக்கள், வளங்கள் மற்றும் முதற்தரத்திலான குழுக்களைக் கொண்ட சிறந்த சுயதொழில் முனைபவர் போன்ற காரணிகளே ஒன்றுக்கொன்று தொடர்புள்ள (Three Driving Force) காரணிகளாக கொள்ள முடிகின்றது.




சுயதொழில் ஒன்று வெற்றியாவதற்கு இருக்க வேண்டிய பிரதான 10 காரணிகளுடன், மேலும் 09 காரணிகள் 9Fs உள்ளன. அவை,

1. ஸ்தாபகராதல் (Founders)
2. இலக்கையடைதல் (Focused)
3. வேகமாகயிருத்தல் (Fast)
4. வளைந்து கொடுத்தல் (Flexible)
5. எப்பொழுதும் இருந்திராத புதுமையான (Forever Innovating)
6. பிளாட் (Flat)
7. சிக்கனம் (Frugal)
8. நம்பகத்தன்மை (Friendly)
9. திருப்தியடைதல் (Fun)



HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் கடுவலை கிளையின் முகாமையாளர் ஆன காஞ்சன ரங்க குணசேகர அவர்கள் செரன்தி ஹன்சிகா அவர்களுடன் இல்லறவாழ்வில் ஆகஸ்ட் 24 ஆம் திகதி இணைந்தார்.



HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் பிரதான காரியாலயத்தில் சேவையாற்றும் துணை முகாமையாளர் ஒகத ஜெயசிங்க அவர்கள் இசாந்தி குரேவை வென்னப்புவ த சியோன் ஹோட்டலில் தனது வாழ்க்கைத்துணைவியாக கடந்த செப்டெம்பர் 07 ஆம் திகதி துணை சேர்த்துக்கொண்டார். அவர்களுக்கு எமது நல்வாழ்த்துக்கள்.

# சுப மங்களம்

## தம்பதியினர்களுக்கு HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் சகோதர ஊழியர் குழாத்தின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.



மீனுவங்கொட லக்னாரா மண்டபத்தில் செப்டெம்பர் 01 ஆம் திகதி திருமண வாழ்வில் இணைந்த HNB கிராமின் பிரதான காரியாலயத்தில் மனிதவள பிரிவின் சிரேஷ்ட முகாமையாளராக செயற்படும் யொஹான் தனஞ்சய அவர்கள் தருஷி லியனகே அவர்களை வாழ்க்கைத்துணையாக இணைந்தார்.

மற்றையவர்களின் வளர்ச்சியை கண்டு சந்தோசம் கொள்வதே தமது வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

HNB GRAMEEN மெஹெவர MEHEWARA

## உதவிப்பணத்தால் பயன் பெற்றோர்…

## கடந்த காலம் என்னிடமிருந்து பறித்துக்கொண்டதை மீண்டும் என்வசப்படுத்திக் கொள்வதே எனது எதிர்ப்பார்ப்பாகும்.



உதயசிறி ரத்நாயக்க
முகாமையாளர்– பொரலஸ்கமுவ கிளை

HNB கிராமின் நிறுவனத்தின் பொரலஸ்கமுவ கிளையின் முகாமையாளரான உதயசிறி ரத்நாயக்க அவர்கள் களனி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் இளங்கலை (B.A) பட்டத்தை பெற்றுள்ளார். வாழ்க்கையின் மற்றுமொரு அத்தியாயத்தின் வெற்றியை வெற்றிக்களிப்பில் மெஹெவரவுடனான உரையாடலின் போது இவ்வாறு கூறினார்.

"நான் உயர்தரத்தில் வணிகப்பிரிவிலேயே கல்வி கற்றேன். இருப்பினும் பல்கலைக்கழக நுழைவுக்கான புள்ளியை நான் பெற்றிருக்கவில்லை. இரண்டாவது முறை பரீட்சைக்கு தோற்றிவிட்டு ஒரு தொழிலுக்கு செல்லும் நோக்கத்திலேயே நான் இருந்தேன். ஏனென்றால் எனது தந்தை இறந்த பின் குடும்பத்தின் சுமையை தாங்க வேண்டிய நிர்பந்தம் எனது பெரிய அண்ணனுக்கு ஏற்பட்டது. அதற்கு சுமையாக நான் இருக்கக்கூடாது எனும் எண்ணத்திலேயே நான் அந்த முடிவை எடுத்தேன். பல நிறுவனங்களில் வேலை செய்தேன். அதே நேரத்தில் Chartered Exam இன் முதல் பகுதியில் சித்தி பெற்றேன். கிராமின் நிறுவனத்தில் 2005 ஆம் ஆண்டிலே அம்பாறை கிளையில் உதவிக்கணக்காளராக இணைந்தேன். அப்போதுமே Chartered ஐ தொடர மனமில் முடியாமல் போனது. அந்த தருணத்தில் தான் நான் களனி பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவனாக பதிவு செய்து கொண்டேன். கலை தொடர்பான கற்கையில் பட்டப்படிப்பை முடித்தேன். அதன் பட்டமளிப்பு விழா நடைபெற்றது இரண்டு மாதங்களுக்கு முன்னாகும். ஆறு மாதங்களாக கம்பஹா கிளையில் நிதி மற்றும் இணக்கங்கள் முகாமையாளராக செயற்பட்டதன் மூலம் மாதத்திலிருந்து பொரலஸ்கமுவ கிளையின் முகாமையாளராக பதவி உயர்வு கிடைத்தது. 2017 ஆம் ஆண்டானது எனது வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாத பல சம்பவங்கள் நிகழ்ந்த ஆண்டு என்று கூறலாம். தொடர்ந்து முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா முன்னரும் தொடர எண்ணியுள்ளேன்.

## வெற்றி பாதையின் தடங்கள்



சாஜக…
SLIM
டிப்ளோமாவை வென்றார்…

சாகக ருபசிங்க
சிரேஷ்ட விற்பனை நிறைவேற்று அதிகாரி

HNB கிராமின் நிறுவனத்தின் நிலையான வைப்புகள் பிரிவில் சேவையாற்றும் ஸ்ரீ.ஜீ.எம். சாகக ருபசிங்க அவர்கள் SLIM இனால் நடாத்தப்படும் ஒரு வருட டிப்ளோமா வான தேசிய டிப்ளோமா 2016/17 (National Diploma in Sales Management) இல் சித்தி பெற்றுள்ளார். இவருக்கு HNB கிராமின் இன் இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மனிதன் ஆதரவற்றவர்களாவது எத்தருணத்தில் எவ்வாறு என்று எவராலும் கூறமுடியாது… அவ்வாறு ஆதரவற்று இருக்கும் போது ஏதேனும் ஒரு விதத்தில் உதவியாக இருக்க முடியுமெனின்… மெஹெவர உதவியால் பயன்பெற்றோர்.

HNB கிராமின் ஊழியர் குழாமின் தத்தம் உதவியால் ஒன்று திரட்டப்பட்ட "மெஹெவர" உதவித்தொகையை நாடு பூராகவும் இருந்து கோரப்பட்ட உதவிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சிலருக்கு எம்மால் அவ்வுதவித்தொகைகளை வழங்க செயற்திட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. அவ்வாறு உதவிகளை வழங்கியுள்ள சிலரின் விபரங்கள் வருமாறு.



பண்டாரவளை கிளை
உறுப்பினர்– க. சந்திமாதேவி
உதவியைப்பெறுபவர்– எஸ். கஸ்தூரி(மகள்)
உதவியை வழங்குவதற்கான காரணம்–
வைத்திய செலவுகளுக்காக



பண்டாரவளை கிளை
உறுப்பினர்– சுசர்மாலீ.கிமரி
உதவியைப்பெறுபவர்– ஆர். எம். ஏ. க. பண்டார (மகன்)
உதவியை வழங்குவதற்கான காரணம்–
வைத்திய செலவுகளுக்காக



பண்டாரவளை கிளை
உறுப்பினர்– கேசு ரோஜா
உதவியைப்பெறுபவர்– எஸ். சுரேஷ் (மகன்)
உதவியை வழங்குவதற்கான காரணம்–
வைத்திய செலவுகளுக்காக

**HNB கிராமின் ஆனது தமது ஊழியர் குழாம் மற்றும் தமது வாடிக்கையாளர்களின் தன்னம்பிக்கை மற்றும் சுயமுயற்சியை மனதளவில் உயர்த்த பெரிதும் செயற்படும் ஒரு நிறுவனமாகும். இந்த நோக்குடன் ஸ்தாபிக்கப்பட்ட பயிற்சிப்பிரிவின் மூலம் இவ்வாண்டின் ஜூலை மாதத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட பல வேலைத்திட்ட செயற்பாடுகளில் இருந்து எங்களுக்கு கிடைக்கப்பெற்ற தகவல்கள் சில…**





கண்டி கிளை உறுப்பினர்கள் 160 பேருக்கு நிதி பரிபாலனம் மற்றும் சேமிப்பை மேம்படுத்தல் தொடர்பான சில சிறப்பு அறிவுரைகள் வழங்கும் வேலைத்திட்டம் 2017.07.28 ஆம் திகதி ரோயல் கென்ஜாவ் ஹோட்டல் வளாகத்தில் அனுர உடலந்த அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.



சிலாபம் கிளை உறுப்பினர்கள் 121 பேருக்கு நிதி பரிபாலனம் மற்றும் சேமிப்பை மேம்படுத்தல் தொடர்பான சில சிறப்பு அறிவுரைகள் வழங்கும் வேலைத்திட்டம் 2017.07.20 ஆம் திகதி சிரஞ்சி ஹோட்டல் மண்டபத்தில் அனுர உடலந்த அவர்களின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்றது.



கந்தளை மற்றும் திருகோணமலை கிளையின் சிங்கள சகோதர ஊழியர்கள் 30 பேருக்கு குழுவாக செயற்படல், ஒன்றிணைந்து செயற்படல் மற்றும் தலைமைத்துவ பண்பு தொடர்பான பயிற்சி வேலைத்திட்டம் 2017.07.15 ஆம் திகதி திருகோணமலை சர்வோதய மண்டபத்தில், திருகோணமலை கடற்கரையில் இடம்பெற்றது.

**தோல்வி என்று ஒன்று இல்லை என்பதை புரிந்து கொள்வதே வெற்றியாகும்.**




# வாழ்வின் இலக்குகளை வெற்றிக்கொள்வதற்கு வயதோ அல்லது பொறுப்புக்களோ தடைகள் கிடையாது...

**சமிந்த பிரபாத்** முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி

**வாழ்க்கை வட்டத்தில் 6 வருடங்கள் எனும் பொழுது ஒரு சிறிய காலமாகவே தோன்றும். ஆனால் ஒரு நிறுவனத்தைப் பொறுத்தமட்டில் அது மிகப் பெரிய காலமாகும். HNB கிராமின் நிறுவனத்தினது 6 வருட கால பயணத்தினைப் பார்த்தால் பல தடைகளைத் தாண்டி வந்த ஒரு பாதையாகவே உள்ளது.**

**இப்பயணத்தின் முக்கிய நபரான சமிந்த பிரபாத் பற்றி கூறுகையில்.**

**HNB கிராமின் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி/ முகாமைத்துவப் பணிப்பாளர் பற்றி கூறியே ஆக வேண்டும். இவரது வாழ்க்கைப் பயணத்தை "நீங்கள் அறிந்திராத நான்" என்கிற சிறப்பு நிகழ்ச்சிக்கு இணைத்தோம்.**

**முழும்பெயர்:** பமுனு அச்சிமங்கெதரகே தொன் சமிந்த பிரபாத்

**பிறந்த திகதி:** 1971.12.18

**உங்களின் குழந்தை பருவம் கடந்து சென்ற விதத்தை பற்று கூறுங்கள்:**

ஹோமாகம நகரிலிருந்து 1½ km தொலைவிலேயே எங்களது வீடு அமைந்திருந்தது. என் தந்தை இராணுவ அதிகாரியாக பணி புரிந்ததோடு, என் அம்மா வீட்டிலிருந்தவாறு ஆடைத் தைக்கும் தொழிலை புரிந்தார். எனக்கு ஒரு சகோதரர் மாத்திரமே. இந்த சுற்றாடலில் நான் என் சிறுபராயம் கடந்து போனது. எங்களது அயலவர்கள் அனைவரும் எமது உறவினராவதுடன், அதில் என் வயதைச் சேர்ந்தோரும் இருந்தனர். ஆகவே நாங்கள் அனைவரும் சேர்ந்து செய்யும் குறும்புகள் ஏராளம். இன்றைய பிள்ளைகளுக்கு அதனை அனுபவிக்கும் வாய்ப்புக்கள் இல்லை.

**பாடசாலை நாட்களில் நீங்கள் விரும்பிய பாடசாலை:**

முதலில் நான் ஹோமாகம கனிஷ்ட பாடசாலையில் கல்வி கற்றேன். எங்கள் வீட்டிலிருந்து இரண்டு வீடுகளுக்கு அப்பால் பாடசாலை. தரம் 3இன் பின்னர் கொழும்பு தர்ஸ்டன் வித்தியாலயத்திலேயே எனது உயர் கல்வி வரையில் கற்றேன். என் வாழ்க்கையின் திருப்புமுனையாக அமைந்தது இப்பாடசாலை என்பதால் இப்பாடசாலையே என் விருப்பத்திற்குரிய பாடசாலையாகும்.

**விடயம்:**

ஆரம்பத்தில் கணிதம் என்பது படிக்காதவொரு விடயமாகவே இருந்தது. பின்னர் எனது நண்பனின் சகோதரர் ஒருவரின் உதவியுடன் கணிதத்தை விரும்பி கற்க ஆரம்பித்தேன். பின்னர் கொட்டாவ மொரகெட்டியவில் இருந்த நாலந்தா இன்ஸ்ட்டிடியூட் என் வாழ்வை மாற்றியமைத்த



மற்றுமொரு மைல்கல்லாகும். அங்கு கற்பித்த புலத்சிங்கல அவரது கற்பித்தலினால் கணிதம் எனக்கு இலகுவானதுடன் உயர்தரத்தில் கணிதப் பிரிவினையே நான் தெரிவு செய்தேன்.

**விளையாட்டு:**

ஆரம்பத்தில் நான் கரப்பந்து, குண்டெறிதல், தட்டெறிதல் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபட்டேன். பின்னர் நான் கல்வி நடவடிக்கை களிலேயே பெரிதும் ஆர்வம் காட்டினேன். சிறிது, சிறிதாக விளையாட்டு க்களிலிருந்து விலகி நின்றேன். ஆனால் கிரிக்கெட்டினை நான் விரும்புவதோடு, மாவட்ட ரீதியிலான திறமைகளை கிரிக்கெட்டில் வெளிக்காட்டினேன்.

**வாழ்வில் நீங்கள் செய்த தியாகங்கள் பற்றி கூறுங்கள்:**

நான் உயர் தரத்தில் இரசாயனப் பிரிவில் குறைந்த புள்ளிகளைப் பெற்றதனால் என்னால் பல்கலைக்கழகத்திற்கு செல்ல முடியவில்லை. இரண்டாவது தடவை முயற்சித்த போதும் பெரிதளவு ஆர்வம் இல்லாததன் காரணமாக இரண்டாவது தடவையும் தோற்றேன். அத்தோடு நின்றுவிடாமல் நான் சாட்டட் (Chartered) செய்ய ஆரம்பித்தேன். அதில் முதலாவது பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்றேன். 1997ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை எவ்வித கற்கை நடவடிக்கைகளிலும் ஈடுபடாமல் தொழிலை மாத்திரமே செய்து கொண்டு வந்தேன். அதன் பின்னர் NIITஇல் கணினி தொடர்பான டிப்ளோமா ஒன்றினை கற்று அதிலும் தேர்ச்சியடைந்தேன். 2007இலிருந்தே எனது சரியான பாதையை



தெரிவு செய்தேன். அப்பொழுது எனக்கு வயது 32. இதற்கிடைப்பட்ட காலங்களிலேயே கணக்கியல் துறையில் ஈடுபட்டேன். அதாவது வணிகம் மற்றும் நிதிக்கட்டுப்பாட்டு தொடர்பான முதுமாணி பட்டப்பின் படிப்பினையும் கற்றுத் தேர்ந்தேன். அவுஸ்திரேலியாவில் சதர்சன் க்வீன்ஸ்லண்ட் பல்கலைக்கழகத்தில் வியாபார கட்டுப்படுத்தல் பற்றிய மாஸ்டர் (Master-Degree) கற்றதோடு CIMA கற்கைநெறியையும் கற்றேன். இருப்பினும் நிதிப்பற்றாக்குறையினால் என்னால் CIMA வை முழுமையாக கற்க முடியவில்லை. கிராமின் நிறுவனத்தினருடன் இணைந்த பிறகே நுண்நிதி பற்றிய கற்கையை தொடர வேண்டி வந்தது. Internationally Certified

Micro Finance Expert (Frank School) என்கிற சான்றிதழைப் பெற்றுக்கொண்ட மூவரில் நானும் ஒருவரானேன். இங்கிலாந்தின் வரையறுக்கப்பட்ட விற்பனையாளர்கள் நிறுவனமொன்றில் Master (CIM) உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட போதிலும் CIMA வினை தொடர முடியாமல் போன கவலை என்றும் இருந்தது. அக்கவலையை எனக்குள் உந்து சக்தியாக மாற்றியவர்கள் எனது நிறுவனத்தில் பணி புரிந்த பத்மசிறி தயாவங்ஷ, ஹர்ஷன குணதிலக ஆகியோரே. சமீப காலத்திலேயே நான் CIMA வினை கற்று முடித்ததோடு, அதுவொரு வித்தியாசமான அனுபவமும் கூட. நான் ஒரு கணவனாக, ஒரு தந்தையாக எனது கடமைகளை சரிவர நிறைவேற்றிக் கொண்டே எனது கற்றலையும், தொழிலையும் செய்தேன். நான் கூற விரும்புவது என்னவென்றால் கற்பதற்கு வயது ஒரு தடையே இல்லை என்பதுடன் நமக்கு இனிமையான பல விடயங்களை நம் வாழ்வில் சேர்க்கின்றது.



**மதத்தை தவிர்த்து நீங்கள் மிகவும் மதிப்பளிப்பது:**
அப்படியான விடங்கள் நான்கு என் வாழ்வில் உள்ளது. முதலாவது என்னை ஈன்றெடுத்து என்னை அரவணைத்து, எனக்கு துணையாய் நின்று வாழ்வில் இந்த அளவிற்கு உயர்த்திய என் தாய், தந்தை. இரண்டாவது நான் கல்வி கற்ற பாடசாலை. அடுத்தது நான் அன்று முதல் இன்று வரை தொழில் புரிந்த இடங்கள். மிக முக்கியமாக என் மனைவி மற்றும் பிள்ளைகள். இந்த நான்கு மிக முக்கிய விடயங்களின் மூலமே என் வாழ்க்கையின் தீர்மானங்களை மேற்கொள்கிறேன். அதேபோல் இவர்களுக்கும் நான் தொழில் செய்த இடங்களுக்கும் பிழைகள் நடைபெறும் அளவிற்கு நான் செயற்படுவதும் இல்லை.

**பாடசாலைக் காலங்களில் உங்களது எதிர்காலம் குறித்த திட்டங்கள்:**
பொறியியலாளராக ஆவதே எனது இலட்சியமாக இருந்தது. அதன் காரணத்தினாலேயே நான் கணிதப்பிரிவினை தெரிவு செய்தேன். ஆனால் நான் தற்போது இருப்பது வேறொரு துறையில். வாழ்வின் ஒவ்வொரு முடிவுக்கும் ஒவ்வொரு காரணங்கள் உண்டு. கடந்து விரும்பினேன்.

**வாழ்வின் மறக்க முடியாத சம்பவம்:**
என் மனைவி சந்தமினியை முதன் முதலாக சந்தித்தது.

**வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான மற்றும் மிகவும் சோகமான தினங்கள்:**
மகிழ்ச்சியான தினங்கள் எனும் பொழுது என் மகன் மார் இருவரும் எனக்கு கிடைத்த நாள் என்று சொல்லுவேன். கவலையான தினம் என்றால் என் பெரியப்பா இறந்த அந்த நாள் என்னை மிகவும் சோகத்தில் ஆழ்த்தியது. ஏனென்றால் வாழ்க்கையை புரிந்து கொள்ள எனை வழி நடத்தியவர் அவரே ஆவார்.



**உங்கள் பலவீனத்தை சரிசெய்து கொள்ள வாய்ப்பு கிட்டினால்:**
எனக்கு பிழைத்த பல விடயங்களை நான் திருத்திக் கொள்வேன்.

**ஒரு தலைவரிடம் இருக்கவேண்டிய குணாம்சங்கள் பற்றி:**
ஒரு தலைவர் தனக்கு கீழ் உள்ளவர்களுக்கே செவிமடுக்க வேண்டும். பெரும்பாலும் அவர்களே அதிகமான விடயங்களை தெரிந்து வைத்திருப்பார்கள், கண்காணித்திருப்பார்கள். எப்பொழுதும் கவனமாக இருக்க வேண்டும். அவர்கள் கூறியதை பொறுமையாக கேட்க வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

**நீங்கள் தேர்ச்சிப் பெற்றிருப்பது:**
நான் நினைப்பது சிறந்த முகாமைத்துவம் பற்றிய சிறந்த கண்ணோட்டத்துடன் செயற்பட முடியும் என்று.

**வாழ்வில் நீங்கள் சந்தித்த முக்கியமான நபர்/ அவர் / அவரிடம் நீங்கள் கண்ட சிறப்பியல்பு:**
என் மனைவி, அவர் சிறந்த இல்லத்தரசியாக பொறுப்புகளை நிறைவேற்றும் அதேவேளை ஒரு தாயாக தனது கடமையை சரியாக செய்கிறார்.

**உங்கள் வாழ்வின் திருப்பு முனை:**
ப்ரைம் லேண்ட் நிறுவன தலைவர் அவரது நிறுவனத்தில் பணிபுரியுமாறு அழைத்தது. அவரது முதலீடுகள் பற்றிய விடயங்கள் தொடர்பில் பொறுப்பாக இருந்தது நான் தான். இதன் மூலமே கிராமின் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டேன்.

**வாழ்வில் முகம் கொடுத்த பெரிய சவால்:**
வரவில் சரிந்து நிலையில் இருந்த நிறுவனமொன்றினையும், அதன் ஊழியர்களையும் பொறுப்பேற்று சிறந்த முறையில் வழிநடத்திச் செல்வது. இது பெதுடர்பில் எனக்கு உதவிய முன்னால் தலைவர் மற்றும் பிரதித் தலைவி அவர்களிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு எனக்கு மிகவும் பேறுதவியாக இருந்தது. அத்தோடு எனது நிறுவன ஊழியர் குழாமினர் எனக்கு எப்பொழுதும் பக்கபலமாகவே இருக்கின்றனர். அவர்களின்றி நான் இவ்வெற்றியைப் பெற்றிருக்க முடியாது.

**உங்களது வாழ்க்கைப் பற்றி திருப்தி கொள்கிறீரா?**
நிச்சயமாக

**நீங்கள் விரும்பும் பாடகர்:**
குறித்த நபரொருவர் கிடையாது. அமரதேவ அவர்கள் முதல் நிஹால் நெல்சன் போன்ற அனைவரது பாடல்களையும் விரும்பி கேட்பேன். சிங்களப் பாடல்கள் மாத்திரமின்றி வேறு மொழிப்பாடல்களையும் கேட்டு இரசிப்பேன்.

**பாடல்:**
அப்படியொன்றும் கிடையாது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப பாடல்கள் மாறுபடும்.

**திரைப்படம்:**
திரைப்படம் என்றால் "சமனல சந்திவனிய" என்கிற திரைப்படத்தினைக் குறிப்பிட முடியும்.

**கலைசார் பொழுதுபோக்கு:**
வாசித்தல் மிகவும் பிடிக்கும், நாவல்கள், சிறுகதைகள் என்பன வாசிப்பேன். ஆனால் அவற்றை தொலைக்காட்சி நாடகங்களாக பார்ப்பதற்கு பிடிக்காது. காரணம் முதல் தடவை வாசித்த போது இருந்த சுவாரசியம் இல்லாது போய்விடும்.

**எதிர்கால இலட்சியம்:**
இதுவரையில் எனது பல கனவுகளை நனவாக்கியுள்ளேன் என்றே தோன்றுகிறது. எதிர்காலத்தில் நம் நாட்டிற்கு சேவைபுரிவதற்கு வாய்ப்பு கிட்டினால் நிச்சயமாக தலைமைத்துவத்தை சரியாக மேற்கொள்வேன். ஆனால் தேர்தலின் மூலமாக நிச்சயமாக இருக்காது.

உரையாடியது – மஞ்சுளா பிரபாத்

ஏமாற்ற முடியாத ஒன்று மனசாட்சியை மட்டுமே.

# போகங்களின் போது கடனை பெற்றுக்கொள்ளும் கடன் திட்டமொன்று இருப்பின் அது வரவேற்கத்தக்கது...



மட்டக்களப்பில் மாங்கேணியில் இருந்து திரும்பி ஜீ.எஸ் பாதையில் சிறிது தூரம் செல்லும் பொழுது தேவகியின் இல்லம் காணக்கூடியதாயிருந்தது. வீட்டுத் தோட்டத்தில் மிளகாய் செடிகள், கத்தரிச் செடிகள், மரவள்ளி, வெற்றிலை போன்ற பயிர்செய்கைகளைக் கொண்டு நிரம்பச் செய்திருந்தார் தேவகி.




நான் கிராமின் நிறுவனத்தினருடன் எனது பயிர்செய்கைக்கு உதவிக்கோரியே கடன் கேட்டிருந்தேன். இது கடந்த 4 வருடங்களுக்கு முன்னரே நடந்த சம்பவமாகும். அன்றிலிருந்து இன்றுவரை 25000, 50000, 100000, 150000 போன்ற கடன் தொகைகளைப் பெற்றுள்ளேன். கிராமின் நிறுவனத்தின் கடனை மீளச் செலுத்தும் முறையானது தவணை முறையை விட போகங்களின் போது செலுத்தும் வகையில் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். காரணம் பயிர்ச் செய்கையானது எப்பொழுதும் வருவாயை தரக்கூடியதல்ல. அதேபோலவே கிராமின் நிறுவத்தினரது சேவைகள் அளப்பரியது. இதன் காரணத்தினாலேயே இந்நிறுவனத்தினருடன் மிகவும் மகிழ்சியாகப் பணிபுரிகின்றோம்

**மு. தேவகி – ஜீ. எஸ். வீதி, செட்டிபாலயம், மட்டக்களப்பு.**

## வியாபாரத்தை ஆரம்பிக்கத் தேவையான நிதியை கிராமின் “திரிய” கடன் திட்டத்தின் மூலமே பெற்றுக்கொண்டேன்



நான் கிராமின் நிறுவனம் பற்றி எனது அயலவர் மூலமே தெரிந்துக் கொண்டேன். ஏனைய நிறுவனங்களின் கடன் திட்டங்களின் சட்டத்திட்டங்களினால் கடன் பெற முடியாது அவதியுற்றேன். அப்பொழுதே கிராமின் நிறுவனம் என்னுடன் கரங்கோர்த்தது. நான் கடந்த 4 வருடங்களாக ஆடைத் தைக்கும் தொழிலைச் செய்து வருகிறேன்.

இதற்கு தேவையான நிதியுதவியினை கிராமின் நிறுவனமே வழங்கியது. எனது கணவர் நான் இத்தொழிலினை ஆரம்பிக்கும் போது வெளிநாட்டில் இருந்தார். இப்பொழுது அவரும் எனது வியாபாரத்திற்கு உதவிகளைப் புரிகின்றார். கிராமின் நிறுவனத்தினது சேவைகள் அளப்பரியது.

சாந்த ஹாசியா
அன்னை தெரேசா வீதி
கீரி மன்னார்

## கிராமின் நிறுவனம் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை என்றும் காப்போம்



கீரி மன்னார் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகள் கடற்கரையோரத்தில் நிறைந்திருப்பர். சுற்றுலாப் பயணிகளுக்கு உணவு மற்றும் குடிப்பானங்களை வழங்கும் தொழிலையே ஜெயகுமார் விஜிதா செய்கிறார். ஒவ்வொரு ஆண்டும் டெண்டரினைப் பெற்றுக்கொள்வோர் மத்தியில் இம்முறை விஜிதா தெரிவாகியுள்ளார்.

இவ்வருடமே டெண்டர் எனக்கு கிடைத்துள்ளது. இதற்கு முன்னர் நான் என் கணவரது மீன் பிடித்தொழிலுக்கு உதவினேன். சுற்றுலாப் பயணிகளுக்கு பல வசதிகளையும் செய்து தருவதன் மூலமே வருமானத்தை தேடிக்கொண்டேன். 2005 ஆம் ஆண்டு HNB கிராமின் நிறுவனத்தினருடன் இணைந்து எனது வியாபாரத்தை அபிவிருத்தி செய்துக்கொள்ள பல கடன்களைப் பெற்றேன். 10 முறைகளுக்கு மேல் நான் கடன் பெற்றுள்ளேன். HNB கிராமின் நிறுவனம் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை என்றும் நாங்கள் பேணிப்பாதுகாப்போம்.

ஜெயகுமார் விஜிதா
கடல் வீதி, கீரி மன்னார்

## Easy Loan.... பெயருக்கேற்ற உடனடிக் கடன்திட்டம்

எனது வியாபாரமானது 12 ஆண்டுகளுக்கு முன் மிகவும் சிறியதொன்றாகவே ஆரம்பித்தேன். பேசாலையில் ஹாட்வெயார் பொருட்கள் பெரிதளவில் இல்லாததன் காரணத்தினால் எனக்கு சந்தைத் தொடர்பான போட்டிகள் இருக்கவில்லை. இதன் போது கடந்த நாட்களில் என் வீட்டு கட்டிட நிர்மாண செலவுகள் அதிகரிப்பினால் வியாபாரத்தில் நட்டம் ஏற்பட்டது. உடனே நான் HNB கிராமின் நிறுவனத்தின் Easy Loan கடன் திட்டத்தை அணுகினேன். அது எனக்கு பெரிதும் உதவியது.




8 இலட்சம் முதல் 2 மில்லியன் வரை பணத்தொகை வரை கடன் பெற்றுள்ளேன். இதுபோன்ற வசதிகள் HNB கிராமின் நிறுவனத்தில் மாத்திரமே உள்ளது என்பதால் இது தொடர்பில் எனக்கு வேறெந்த கவலைகளும் கிடையாது.

**ஜோன்சன் ப்ரணாந்து – ப்ரணாந்து ஹாட்வெயார் பேசாலை.**

# அவர்களின் ஆனந்த கண்ணீரின் உரிமையாளர்கள் நீங்களே....



மன அமைதியே மன நிறைவாகும்



ஆறு பிள்ளைகளுடன் இனோகா மற்றும் அவரின் கணவர் வாழ்ந்த பழைய வீடு

தென்னையோலையின் வழியே வந்து விழும் சூரியக்கதிர்களையும் பார்க்க மழைக்காலங் களின் போது, அதே தென்னையோலையின் வழியே உடம்பில் வந்து விழும் மழைத்துளிகள் மிகவும் கொடுமையானவை. பகல் வேளைகளிலும் பார்க்க இரவு வேளைகளில் பெய்கின்ற மழையின் போது அம்மா என் தம்பியையும் இடுப்பில் சுமந்துக் கொண்டு வீடு முழுவதும் ஓடித் திரிவார். காரணம் தனது குழந்தைகளை மழையில் நனைய விடாது பாதுகாப்பதற்காகும். தங்களது இவ் அவல நிலையை இல்லாதொழிப் பதற்கு இனோகா பல இடங்களுக்கு ஏறி, இறங்க வேண்டி யிருந்தது. இருந்தாலும் எவ்வித பலனும் இல்லை. இறுதியில் தனது விடாமுயற்சியின் விளைவாக HNB கிராமின் புத்தள கிளைக் காரியாலயத்தில் கடன் வழங்கும் பிரிவின் பிரதான நிறைவேற்றதிகாரி திரு. பிரசாத் புத்திக்க தனது சங்க உறுப்பினரான இனோகா பற்றிய விடயங்களை உள்ளடக்கிய விண்ணப்ப மொன்றினை தனது பிரதேச காரியாலய முகாமை யாளரிடம் முன்வைக்கின்றார். அதாவது இக்குடும்பத்தினருக்கு இல்லமொன்றை அமைத்துத் தருமாறு வேண்டி நின்றார்.

திரு. பிரசாத் அவர்களின் வேண்டுகோளுக்கு பிரதான காரியாலயத்தின் "மெஹெவர" என்கின்ற நிதித்திட்டத்துடன் இவர்கள் இவ்வாறே தொடர்புக் கொள்கின்றனர். இம்முடிவானது HNB கிராமின் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடமிருந்து கிடைக்கப்பெற்றதனாலேயே இவர்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்தது. புத்தள காரியால அதிகாரிகளின் உதவியாலும், ஒத்துழைப்பாலும் இனோக்காவின் இல்லமானது படிப்படியாக நிர்மாணிக்கப்பட்டது. ஆகஸ்ட் மாதம் 02 ஆம் திகதி அவர்களால் தங்களது இறந்த காலத்தை மறந்து, அந்த குடிலை மறந்து, புதிய இல்லமொன்றில் தடம் பதிக்க முடிந்தது. இது HNB கிராமின் நிறுவனத்தின் பாரிய பங்களிப்பின் மூலமே இனோகாவின் இவ் ஆனந்தகரமான தருணத்தை மேலும் அழகாக்கிட அவருடைய புதிய இல்லத்திற்கு நாங்கள் சென்றோம். புதிய பைகளுடன் பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமாகும் இனோகாவின் மூன்று பிள்ளைகள் அவர்களிடம் தங்களது புதிய இல்லம் பற்றி கேட்ட போது அப்பிள்ளைகளின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அதன் அர்த்தங்கள் ஆயிரம்






மாடில்லா மகிழ்ச்சியை அனுபவிப்பதை எம்மால் உணர முடிந்தது. இனோகா எம்மிடம் கூறியதாவது:- "எங்களுக்கு ஆறு குழந்தைகள். எனது கணவரின் மாத வருமானம் எங்களது செலவுகளுக்குப் போதவில்லை. ஆகையால் நான் ஆடைகள் தைக்கும் சுயத்தொழிலொன்றினை மேற்கொள்ள முடிவு செய்தேன். அதற்கு தையல் இயந்திர மொன்றை வாங்குவதற்கு HNB கிராமின் "திரிய" கடன் உதவி திட்டத்தினை நாடினேன். 2012 முதல் இன்று வரை HNB கிராமின் என் வாழ்வின் ஒவ்வொரு தருணங்களுக்கும் உதவி அவற்றை உன்னதமாக்கியுள்ளது. அதேபோல் எனது குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஒரு உறைவிடத்தையும் HNB கிராமின் வழங்கியுள்ளது" என கண்ணீர் மல்க உருக்கமாக பேசினார்.

"மெஹெவர" கடனுதவியின் மூலம் இனோகாவிற்கு உதவி செய்த HNB கிராமின் பினான்ஸ் லிமிடட் இன் பயிற்சி பிரிவுத் தலைவர் அனுர உடவத்த தனது கருத்தினை இவ்வாறு கூறினார். "HNB கிராமின் நிறுவன அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட "மெஹெவர" என்கிற திட்டம் இலங்கையில் எப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களுக்கு தங்களது உதவியை வழங்குவதற்கு எப்பொழுதும் தயாராகவே உள்ளது. எமது நிறுவனத்தினை முன்னணி நிதி நிறுவனமாக திகழ்வதற்கு உதவிய எமது வாடிக்கையாளர்களுக்கு எங்களது அளப்பரிய சேவையினை வழங்க தயாராகவே உள்ளோம்" என HNB நிறுவன பிரதான நிறைவேற்றதிகாரி / முகாமைத்துவ பணிப்பாளர் சமிந்த பிரபாத் அவர்கள் கூறினார்.

இனோகாவின் குடும்பத்தினருக்கு உதவுவதற்கு எமக்கு ஒத்துழைப்பை வழங்கிய உங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வறுமையில் வாடுபவருக்கு உதவி செய்வதன் மூலம் மன நிறைவையும், மன அமைதியையும் பெறலாம்.



ஆக்கம் –
மஞ்சுள பிரபாத் ஹெட்டிஆரச்சி
படப்பிடிப்பு –
நிர்மான / லக்ஸ்மன்

# எங்கள் மன தைரியத்துடன் கிராமின் நிறுவனத்தினால் எங்களுக்கு கிடைத்த நிதி உதவியால் நாங்கள் இந்த இடத்திற்கு வந்துள்ளோம்...

## கிராமின் சக்தியும் அவரின் முயற்சியும்

மன்னாரில் இருந்து தலை மன்னார் செல்லும் வழியில் பேசாலையை கடந்தே செல்ல வேண்டும். பேசாலையில் இருந்து ஒரு சிறிய பாதை வழியே முன்நோக்கி செல்லும் போது கடற்றொழிலை பிரதான வாழ்வாதாரமாக கொண்ட, கடற்கரையில் கப்பல்கள், ஓடங்களை வரிசையாக நிறுத்தி வைத்துள்ள அந்த இடம். "இன்று ஒரு ஸ்ட்ரைக் அது தான் எல்லா ஓடங்களையும் நிறுத்தி வைத்துள்ளார்கள்..." அந்த அழகிய காட்சிக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக அமைந்தது சோனியாவின் உரையாடல்...

"போவோம் எல்லாரும் வீட்டுக்கு..." என்று கூறி அவர் அழைப்பு விடுத்தது தொடக்கம், எமக்கு மொழிக்காக உதவி செய்தது மன்னார் பிராந்திய பொறுப்பதிகாரி பிராந்திய முகாமையாளர் ஜோசப் ஜோன் அவர்களே.

நான் பிறந்தது பேசாலையில். புனித மரியாள் வித்தியாலயத்தில் கல்வி கற்றேன். தந்தை கடற்றொழிலை செய்ததால் அன்று முதல் இன்று வரை கடற்றொழில் எங்கள் வாழ்க்கையுடன் மிகவும் ஒன்றியது. நாங்கள் விளையாடியது கூட இந்த கடலில் தான். எங்கள் தந்தை என்னையும் என் மூன்று அண்ணன்மாரையும், அக்கா, தங்கை என அனைவரையும் வாழ வைத்தது இந்த கடற்றொழிலில் ஈடுபட்டேயாகும். என்னுடைய பாடசாலை வாழ்க்கை சாதாரண தரத்துடன் முடிவு பெற்றது. 2007 ஆம் ஆண்டு நான் திருமணம் செய்து கொண்டேன். என் கணவரும் கடற்றொழில் செய்பவர். கணவருக்கு ஓடங்கள் இருந்தது. எங்கள் வாழ்வாதாரமாக இருந்ததும் அத்தொழிலே. அந்த கால கட்டத்தில் தான் கிராமிய அபிவிருத்தி சங்கத்துடன் இணைந்து அங்கு நடைபெற்ற ஒன்று கூடல்களின் போது அவர்களின் கடன் திட்டங்கள் மற்றும் அதன் பயன்கள் தொடர்பாக எங்களுக்கு தெரியப்படுத்தினார்கள். அதற்கு முன் கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள், மற்றைய சுய தொழில் செய்பவர்களுக்கு நிதி



உதவிகளை வழங்கும் நிறுவனம் ஒன்று இருக்கவில்லை. வங்கிக்கடன்கள் கொடுக்கப்பட்டாலும் அதை பெற்றுக்கொள்ளும் அளவிற்கு வசதிகள் எங்களிடம் இருக்கவில்லை. பல வசதிகளுடன் அறிமுகம் செய்யப்பட்ட கிராமின் நுண்நிதி முறை இந்த பிரதேச மக்களுக்கு பெரும் உதவியாக இருந்தது. அது மட்டுமல்லாமல் எங்கள் வீடுகளுக்கு அருகிலேயே மத்திய நிலையங்களையும் அமைத்து எங்களுக்கு தேவையான சேவைகளை வழங்குவதுடன்



எங்களுக்கு புரியும் மொழியில் பேசுவதுடன், நிதி உதவிகளை வழங்குவது மட்டுமல்லாமல் அதை எப்படி முகாமைப்படுத்துவது எப்படி தொடர்பாகவும் சிறந்த அறிவை பெற்றுத்தந்தனர். அத்துடன் அந்த காலத்தில் இது போன்ற நுண்நிதிகளை வழங்கியது கிராமின் நிறுவனம் மாத்திரமே.

நான் கிராமின் நிறுவனத்துடன் இணைந்து முதலில் பெற்றுக்கொண்டது ரூபா 5000.00 ஆகும். அந்த பணத்தில் வலைகள் வாங்கினேன். கடற்றொழில் செய்பவர்களுக்கு பணம் தேவைப்படுவது வலைகளுக்கு தான். கணவர் கடலுக்கு சென்று வந்ததும் வலையிலிருந்து மீன்களை அகற்றி அவற்றை நான் தான் சுத்தப்படுத்துவேன். எங்களிடம் மீன் வாங்குபவர்கள் கடற்கரைக்கே வந்து மீன்களை கொள்வனவு செய்கின்றார்கள். சில நேரத்தில் மீன்கள் எஞ்சும் போது அவற்றை கருவாடுகளாக்குவோம். நான் இப்பொழுது கிராமின் நிறுவனத்தில் பல தருணங்களில் கடன்களை பெற்றுள்ளேன். ரூபா 5000 இலிருந்து ரூபா 150000 வரை. பத்து வருடத்திற்கும் மேலாக நான் கிராமின் நிறுவனத்துடன் கொடுக்கல் வாங்கல்களை செய்து வருகின்றேன். அதனால் கிராமின் என்பது கடன் வழங்கும் ஒரு நிறுவனம் மட்டும் அல்ல. எங்களுடனேயே இருக்கும் எங்களுக்கு அவசரத்திற்கு உதவும் எங்களுக்கான ஒரு இடம் ஆகும்.

இன்று வாழ்க்கையை சந்தோசமாக வாழ்கின்றோம் என்றால் எங்கள் சுய முயற்சியுடன் கிராமின் நிறுவனத்தின் நிதி உதவியுடனே என கூறமுடியும். அத்துடன் எத்தருணத்திலும் எங்களுக்கு கைகொடுத்து நின்ற ஒரு இடமென்று கூற முடியும். பாசாலை கடற்கரை வெயிலால் சுட்டெரித்தது. கடற்கரையில் மக்களின் இரைச்சலைக் குறைக்க அந்த சூரியனால் ஒரு போதும் முடியவில்லை. கடந்து போவது ஒரு நாள் மட்டும் அல்ல வாழ்க்கையும் தான் என்பதை உணர்ந்து தனது வாழ்க்கையை நகர்த்தும் மக்களுக்கு உந்து சக்தியாக இருப்பதுடன் தமது சுக துக்கங்களில் பங்குகொள்ளும் ஒரு குடும்ப அங்கத்தவராக திகழும் HNB கிராமின் நிறுவனத்தின் ஊழியர்கள் எம்மை போன்ற மீனவர்களின் வாழ்க்கையில் ஒரு முக்கியமானவர்களே. இந்த சுவாரஸ்யமான விடயங்களை பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கிடைத்தமை பெறும் திருப்தியளிக்கின்றது.







ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி
- மொழிபெயர்ப்பு -
லக்ஷ்மன் குமாரதுங்க


# HNB கிராமின்
# நட்சத்திர இரவில் பிரகாசித்த நட்சத்திரங்கள்

**HNB** கிராமின் நிறுவனத்தின் **Night of Stars 2016/17** ஒன்றுகூடல் கடந்த ஜூலை 01 ஆம் திகதி விமர்சையாக நடைபெற்றதுடன் கடந்த ஆண்டில் அதிசிறந்த திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். ஆயிரத்து அறுநூறுக்கு அதிகமான ஊழியர்கள் மத்தியில் இவ்வாறு விருது பெற்றவர்களின் அயரா உழைப்பு, அர்ப்பணிப்பு என்பவற்றை ஊக்குவிக்கும் வகையிலேயே இவ்வாறு இவர்கள் கௌரவிக்கப்பட்டனர். **HNB** கிராமின் நிறுவனத்தின் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அனைத்து ஊழியர்கள் மத்தியில் மிகச்சிறந்த திறமைகளை வெளிப்படுத்தி விருதுகளை வென்றவர்கள் மெஹெவரவிற்கு இவ்வாறு தனது உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர்.



தனது கிளையை சிறப்பான ஒரு வழிநடத்தலுடன் சரியான ஒரு பாதைக்கு கூட்டிச்சென்று, தனது முகாமைத்துவத்தின் தன்மை மற்றும் அதை உபயோகிக்கும் விதம் தொடர்பில் அவதானத்துடன் செயற்பட்டு, தனது ஊழியர் குழாமுடன் அணியாக செயற்பட்டு பிராந்திய மக்களின் வாழ்க்கைக்கு சரியான ஒரு வழிகாட்டலையும் வழங்கி, தனது சேவையை சிறப்பாக வழங்கி ஆண்டின் விருது வழங்கல் விழாவில் சிறந்த பிராந்திய முகாமையாளருக்கான விருது வழங்கப்படும். 2016/17 ஆம் ஆண்டிற்கான இவ்விருதினை காமினி ஆரியசிங்க அவர்கள் பெற்றார்.

ஒரு நிறுவனத்தின் முக்கிய சொத்து ஊழியர்கள் மற்றும் எம்முடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வாடிக்கையாளர்கள். இந்த இருவருக்கும் இடையில் சிறந்த நட்புறவை பேணப்பண்ணுவதே என்னுடைய கடமையாகும். அதேபோல் தமது ஊழியர் குழாமின் உறுப்பினர்களின் தன்மையை சரிவர புரிந்து அவர்களின் திறமையின் மூலம் சரியான பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதுடன், அவர்களின் பிரச்சினைகளுக்கு சரியான தீர்வுகளை வழங்குவதும் ஒரு முகாமையாளரின் முக்கிய கடமை என நான் நினைக்கின்றேன். எனது தொழிற்துறையின் எனது பொறுப்பை அறிந்து அதை நிவர்த்தி செய்ய எப்பொழுதும் நான் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளேன். அந்த சேவையை கௌரவிக்கும் வகையில் செயற்படுவது என்பது எமக்கு கிடைக்கும் மிகப்பெரிய ஒரு சந்தோசமாகும். அத்துடன் அவ்வாறு ஊழியர்களை கௌரவிக்கும் ஒரு முகாமைத்துவ அணி கிடைப்பது என்பது உண்மையிலேயே பெரும்பாக்கியமாகும்.






நுண் நிதிக்கடன்களை வழங்குவதற்கும் மேலாக HNB கிராமின் நிறுவனமானது சிறு மற்றும் நடுத்தர கடன்களையும் (SSE LOAN) தற்போது வழங்குகின்றது. நாடு பூராகவும் உள்ள 100 ற்கும் மேற்பட்ட கிளைகளில் சிறந்த சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரிக்கான விருதை மன்னார் கிளையின் க்ரிஸ்டி மயூரன் சூசாய் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

நான் கிராமின் நிறுவனத்துடன் இணைந்து இப்பொழுது இரண்டு வருடங்கள் ஆகின்றது. HNB கிராமின் நிறுவனத்திற்கு வரும் முன் நான் பல நிறுவனங்களில் சேவையாற்றியுள்ளேன். மன்னார் கிளையின் SSE நிதி முகாமையாளர் (Small Scale Entrepreneur) ஆக எனது கடமையை ஏற்றவுடன் அது பெரும் சவால் என தோன்றியது. ஏனென்றால் HNB கிராமின் நிறுவனத்தின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சேவை என்ற வகையில் அனைத்தையும் புதிதாக செய்யவேண்டி இருந்தது. இருப்பினும் மன்னார் கிளையினால் எனக்கு கிடைத்த ஒத்துழைப்பை நான் இந்த இடத்தில் நிச்சயம் கூற வேண்டும். அதேபோல் நகரங்களில் இடம் பெற்ற விழிப்புணர்வு மற்றும் வீடு வீடாக சென்று மேற்கொள்ளும் விழிப்புணர்வுகளின் போது எங்களுக்கு புதிய வாடிக்கையாளர்கள் கிடைத்தனர். இவ்வாறு நான் சேவையாற்றிய முறைக்கு கிடைத்த ஒரு அங்கீகாரமாகவே நான் நினைக்கின்றேன்.

HNB கிராமின் எனும் பெயரும் நுண்நிதி என்னும் மரத்தின் ஒரு கிளையாக இருந்தாலும் நிறுவனத்தின் நம்பிக்கை மற்றும் எமது சேவையின் மூலம் நல்லதொரு பிரதிபலன் கிடைத்தது. நாடு பூராகவும் சேவையாற்றும் 600ற்கும் மேற்பட்ட நுண்நிதி பணியாளர்களில் சிறந்த நிதி நிறைவேற்று அதிகாரி (நுண் நிதி) ஆக விருது பெற்ற அம்பாறை கிளையின் மெஹோமட் சஜீர் அவர்கள் தனது வெற்றி தொடர்பில் மெஹெவரவிற்கு இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

நான் கிராமின் நிறுவனத்தில் இணைந்தது 2012 செப். 17 ஆம் திகதி. எனது இரண்டாம் வேலை இதுவாகும். கொழும்பில் வேலை செய்து விட்டு வீட்டிற்கு வந்திருக்கும் போது தான் கிராமின் தொடர்பில் என் நண்பர் ஒருவர் மூலம் அறியக்கிடைத்தது. அப்போது வீட்டை விட்டுவிட்டு அங்கு சென்று வேலை செய்யவேண்டி இருந்ததால் அந்த தொழிலில் பெரிதாக எனக்கு பிடிப்பு இருக்கவில்லை. எனது நண்பர் ஒருவர் மூலம் கிராமின் நிறுவனத்தில் துணை நிறைவேற்று அதிகாரியாக இணைந்தேன். அன்று முதல் இன்று வரை எனது சேவையை சரியாக, நேர்மையாக வழங்கியுள்ளேன். அன்று Night Of Star இல் இருந்து எனக்கு அழைப்பு வந்ததும் நான் நினைத்தேன் பிராந்திய அளவில் ஏதும் எனக்கு விருது இருக்குமென்று. இருப்பினும் அகில இலங்கை மட்டத்தில் சிறந்த நிதி நிறைவேற்று அதிகாரியாக தெரிவு செய்யப்பட்டது பெரும் மகிழ்ச்சியை பெற்றுத்தந்தது. இவ்வாறு விருதுகளை வழங்கி எம்மை ஊக்குவித்தல் தொடர்பில் HNB நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.



நுண்நிதி நிறுவனங்களில் கடன் அதிகாரியாக தெரிவு செய்யப்படுவதே பெரும் சவாலாகும். இவர்கள் மத்தியில் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு வருடத்திற்கு குறைந்த சிறந்த திறமையை வெளிப்படுத்திய நுண்நிதி அதிகாரியாக 2016/17 ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டவர் வவுனியா கிளையின் எஸ். பிரசாந்தன் ஆவார்.

நான் கிராமின் நிறுவனத்திற்கு வந்தது 2016 மே மாதம். எமக்கென்று எப்பொழுதும் ஒரு இலக்கு இருக்கும். அந்த இலக்கை அடைவது மட்டுமல்லாமல் வழங்கிய கடன்களை மீண்டும் பெற்றுக்கொள்ளல் தொடர்பிலும் நாங்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டி இருக்கும். நான் எப்பொழுதும் அவதானத்துடன் அதிக கடன்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலேயே ஆகும். அவதானத்துடன் செயற்படுதல் என்பது ஒரு நிதி அதிகாரிக்கு இருக்க வேண்டிய ஒரு முக்கிய பொறுப்பாகும்.



கிராமின் நிறுவனத்தில் இணைந்த இந்த குறைந்த நாட்களுக்குள் எனது சேவை தொடர்பில் இந்த அளவிற்கு ஒரு அங்கீகாரம் கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை. அது தொடர்பில் எனக்கு பெரும் மகிழ்ச்சி. அதேபோல் இந்த விருதை கையில் பெறும் போது அடுத்த ஆண்டு சிறந்த நிறைவேற்று அதிகாரிக்கான விருதை பெற வேண்டும் என்ற நம்பிக்கையும் மனதில் எழுந்தது.

# அறிவு வளர்ச்சிக்கும்- பரிசில்களை வென்றிடவும்
## மெஹெவர குறுக்கெழுத்து

**போட்டி இல 08**

அதிஷ்டசாலிகள் மூவருக்கு சதீபா வெளியீட்டாளர்களினால் 3000 பெறுமதியான புத்தகங்கள் பரிசாக வழங்கப்படும்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ப | ■ | ■ | 2 | | 4 | | 8 |
| 3 | | | | ■ | | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | ம் |
| ■ | 5 | ட் | | ■ | | 14 | ■ |
| 6 | ■ | ■ | ■ | ■ | 10 | ரி | 12 |
| 7 | | ■ | 11 | | | | |
| ■ | ■ | ■ | ■ | ■ | | ■ | |
| 9 | | | ■ | 13 ப | | | ■ |

மெஹெவர குறுக்கெழுத்துப் போட்டியானது இவ்வார இதழில் காணப்படும் விடயங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்சஞ்சிகையை முழுமையாக வாசிப்பதன் மூலம் இதற்கான விடையை இலகுவாக கண்டு பிடிக்கலாம்.HNB கிராமின் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் இந்தப்போட்டியில் கலந்து கொள்ள முடியும் என்பதுடன் குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுபவர்கள் இந்தக் கூப்பனை பூர்த்தி செய்து எமக்கு அனுப்பி வைக்கவும். அதிஷ்டசாலிகள் மூவருக்கு சதீபா வெளியீட்டாளர்களினால், பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் பரிசாக வழங்கப்படுமிங்கள் விடைகளை அடுத்த வாரம் மூன்றாம் மாதத்திற்கு முன்னர் "மெஹெவர குறுக்கெழுத்து, எச்.என்.பி கிராமின், இல 168 நாவல வீதி, நுகேகொடை" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

### மேலிருந்து கீழ்

1. வாரத்தில் ஒரு நாள்
2. மட்டக்களப்பில் உள்ள ஒரு ஊர்
4. வறுமையின் எதிர் சொல்
6. சட்டத்தின் மூலம் கிடைப்பது
8. பணத்தை துரிதமாக பெற உதவுவது
10. இஸ்லாமின் இறை தூதுவர்கள்
12. முடி என்பதன் ஒத்த சொல்
14. குதிரையை இப்படியும் அழைப்பர்

### இடமிருந்து வலம்

3. நமக்கு வரும் நோய்களில் ஒன்று
5. நாய் ஈன்றெடுப்பது
7. பக்கங்களை அறிந்து கொள்வது இதன் உதவியுடன்
9. இளமைக்கு எதிர் சொல்
11. எப்பொழுதும் எம்மிடம் இருக்க வேண்டியது
13. கல்வி கற்க செல்லும் இடம்

பெயர் : ........................................ ஊழியர் இலக்கம் : ..................
கிளை : ........................................ குறுக்கெழுத்து போட்டியில் கலந்து கொண்டவரின் பெயர் : ........................................
உறவு முறை : ........................................
திகதி : ........................ கையொப்பம் : ........................................

மெஹெவர குறுக்கெழுத்து போட்டி இல 08

## இவர்களும் சரியான பதில்களை அனுப்பியிருந்தனர்

கவீ.ஐ.மதுஷானி-கடுவலை கிளை. ஜீ.டீ.ரஞ்சனு-பலாங்கொடை கிளை. மிலானி சாமிக பிரதான காரியாலயம். ருசிரு பிரியலால்-கந்தளை கிளை. கயானி அனுருத்த-கடுவலை கிளை. ஒதத ஜெயசிங்க-பிரதான காரியாலயம். கே.எல். சந்தருவனி-நாவலப்பிட்டிய கிளை. தருஷி ஹன்சினி-பிரதான காரியாலயம். இ.எல். சஞ்சீவ-பிரதான காரியாலயம். எச்.கே.பீ.தனஞ்சய-நகரக்கிளை. கே.ஆர். குணசேகர-கடுவலை கிளை. சீ.பீ. ஹரிச்சந்திர-பிரதான காரியாலயம். எல். டபிள்யூ. சம்பத்-பலாங்கொடை கிளை. தர்ஷனா- கடுவலை கிளை. எம். யூ.எல். துர்மவர்தன-பிரதான காரியாலயம். திலினி கல்பனா-பிரதான காரியாலயம். கே.எம். குமாரத்ன-கடுவலை கிளை. ஜ.எ.மதுஜித்-இரத்தினபுரி கிளை. பிரதீப் குமார-பிரதான காரியாலயம். பீ.எல்.சீ. மதுஷானி-பிரதான காரியாலயம். பீ.எம்.யூ.குமாரி கந்தளை கிளை. எம்.ஜ. உடயங்க-பலாங்கொடை கிளை. எச்.பீ. சஞ்சீவ-மாத்தளை கிளை. எஸ்.ஜே.பண்டார-கடுவலை கிளை. டபிள்யூ. கிஷான்-பிரதான காரியாலயம். கே.எம. ரமேஷ்-நாவலப்பிட்டிய கிளை. டீ.ஐ. லக்மான்-கடுவலை கிளை. அனுஷா பெரேரா-பிரதான காரியாலயம். ஷெலும் சமர-பலாங்கொடை கிளை. ஆர். ராஜஞ்சலி-பிரதான காரியாலயம். கே.கே.எல் பிரபாத்-பிரதான காரியாலயம். ஜே.டீ.எல்.திலருக்ஷி-சிலாபம் கிளை. டீ. கமகே-பிரதான காரியாலயம். சுஜாந்த மெண்டிஸ்-பிரதான காரியாலயம். சமர பீரிஸ்-பிரதான காரியாலயம். மஹேஷ் குமார-பிரதான காரியாலயம். கே.சீ.எல் சில்வா-கடுவலை கிளை

"மெஹெவர குறுக்கெழுத்துப்போட்டி" போட்டி இல 07 – ஜுலை ஆகஸ்ட் இதழுக்கான வெற்றியாளர்கள்



கே.ஏ.ஏ.என். பெரேரா
கடுவலை கிளை



எஸ்.ஆர்.பீ. திலருக்
பிரதான காரியாலயம்



சேவ்மி த அல்மேதா
மதுகம கிளை



மெஹெவர வெளாசா குறுக்கெழுத்துப்போட்டிக்கான விடைகளை அனுப்புபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதுடன் அதற்காக நீங்கள் காட்டும் ஆர்வமும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கடந்த மெஹெவர இதழின் வெற்றியாளர்களை தெரிவு செய்யும் தருணத்திற்கு எம்முடன் இணைந்த வீசிங் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் புத்மசிறி தயாபால அவர்களுக்கும், SME பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் சரவி பெரேரா அவர்களுக்கும், லீசிங் பிரிவின் முகாமையாளர் உதார தனஞ்சய அவர்களுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சதீபா
● புத்தக வெளியீட்டாளர் ● அச்சு நிறுவனம்
● புத்தக நிலையம் ● அச்சகம்

பிரசித்தி பெற்ற பௌத்த , இலக்கிய மற்றும் கல்வி புத்தக வெளியீட்டாளர்

Sole Agent in Sri Lanka
PELANGI
Penerbitan Sdn. Bhd.
Malaysia.

சிறுவர்களுக்கு ஆரம்பத்தில் இருந்து ஆங்கிலம் சரளமாக கற்பதற்காக மலேசியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட Phonics புத்தகம்

வ/ப. சதீபா வெளியீட்டாளர்கள்
SADEEPA PUBLISHERS(PVT)LTD
1060, மருதானை வீதி பொரளை
தொலைபேசி : 011-2686114, 2694289, 2678043
பெக்ஸ்: 011-2678044
Email : sadeepapub@gmail.com

# Atlas சித்திரக்கலை நண்பர்கள்

## சிறுவர்களின் கைவண்ணப்பகுதி

"சித்திரக்கலை நண்பர்கள்" வரைதல் பகுதி எச்.என்.பி.கிராமின் உத்தியோகத்தர்களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள் ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சித்திர கலை நண்பர்கள் பகுதியில் பிரசுரிக்கப்படும் சிறந்த மூன்று படைப்புகளுக்கு சிலோன் பென்சில் நிறுவனத்தினால் (அட்லஸ்) பெறுமதி மிக்க பரிசுக் குவியல்கள் மூன்று வழங்கப்படுவதுடன் நீங்கள் வரைந்து அனுப்பும் தாளின் பின்பகுதியில் அட்லஸ் இலட்சினையை ஒட்டி அனுப்பவும். உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை படைப்புக்களை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளின் [illegible] பதிப்பாசிரியர் கைவண்ணப்பகுதி. எச் என்.பி. கிராமின் கட்டிடம், இல 106, நாவல வீதி, நுகேகொடை என்ற முகவரிக்கு அனுப்பி

### Atlas சித்திரக்கலை நண்பர்கள்

ஜுலை – ஆகஸ்ட் இதழின் வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| எங்கள் வீட்டுச் செல்லம் – | நிதுல மதனைத் சேனாரத்ன<br>2 ஆம் தரம்<br>சுசல் உபேந்திர சேனாரத்ன<br>கேகாலை கிளை |
| கிராமம் – | ஆர்.எம். சொனாலி சதமினி<br>2 ஆம் தரம்<br>நுவரெலியா கிளை |
| வாறாது – | சதுர மதாரக் ரணவீர<br>3 ஆம் தரம்<br>கமல் பிரியங்க<br>பிரதான காரியாலயம் |



எமது மைதானம்
உதுல் புத்மினி – 3 ஆம் தரம்
(புத்திக தன்த்ரிகே– பிரதான காரியாலயம்)



எனது வீட்டுத்தோட்டம்
ட.எம். மயுமி பாசரா தெலிசிங்க – 3 ஆம் தரம்
(ட.எம்..எஸ். உதய குமார – சிலாபம் கிளை)





எனது பட்டம்
நிதினி நிவென்தா – 1 ஆம் தரம்
(மகேஸ் உதய – அம்பலாங்கொடை கிளை )



எனக்கு பிடித்த கப்பல்
கவின் ரன்தீவ் – 2 ஆம் தரம்
(ட.எம்.எஸ்.திலகரத்ன – நிகரவெறிய கிளை )



காலை உதயம்
ட.எம். நெத்மி சத்சரனி – 4 ஆம் ஆண்டு
(ட.எம்.எஸ்.திலகரத்ன– நிகரவெறிய கிளை)



## ரமேஷ் பென்சேகா அவர்கள் மூன்றாவது முறையாகவும் இலங்கை நுண் நிதி துறையினரின் சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு

HNB கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் உதவிப் பொதுமுகாமையாளர் (இணக்கங்கல்) ரமேஸ் பொன்சேகா அவர்கள் இலங்கை நுண் நிதி துறையினரின் சங்கத்தின் பணிப்பாளர் ஒருவராக (2017/2018) மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்

2013 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை நுண் நிதி துறையினரின் சங்கத்தின் பணிப்பாளராக கடமையாற்றிய அவருக்கு HNB கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை மற்றும் ஊழியர்களின் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

**உலகில் உயர்ந்த நிலை, பதவி, இடத்தை பெற்றுக்கொள்ளக்கூடியது அர்ப்பணிப்பின் மூலமே.**

## பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்தை உருவாக்குவது பொருட்டு HNB கிராமின் முதலிடம் பெறுகிறது

இலங்கை சிறுவர்கள் முகம் கொடுக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தொனிப்பொருளில் "பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்திற்காக" HNB கிராமின் பினான்ஸ் லிமிட்ட் இனால் ஒழுங்குபடுத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளில் மற்றுமொரு நிகழ்வு செப்டெம்பர் 14 ஆம் திகதி வெலிகம பொலிஸ் மற்றும் வெலிகம பிரதேச செயலாளர் காரியாலயமும் இணைந்து ஒழுங்கு செய்த மாத்தறை வெலிகம நகரத்தை உள்ளடக்கி வெலிகம நகர சபை மண்டபத்தில் மிகவும் வெற்றிகரமாக இடம் பெற்றது.

நாட்டின் வர்த்தக மற்றும் சமூக வளர்ச்சி செயற்பாடுகளுக்காக எப்பொழுதும் கைகொடுக்கும் HNB கிராமின் நிறுவனம் தனது சமூகத்தின் மீது மிகவும் அக்கறை கொண்டுள்ளது என்பதை சான்று பகர்க்கும் வகையில் "பாதுகாப்பான சிறுவர் சமுதாயத்திற்கு" எனும் விழிப்புணர்வூட்டும் ஒரு வேலைத்திட்டத்தை நாடு பூராகவும் மேற்கொண்டு வருகின்றது. இலங்கை பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் செயற்பாடுகள் மக்கள் தொடர்பு பிரிவின் ஸ்தானாதிபதி, பிரபல பேச்சாளர் மனோஜ் சமரகோன் அவர்களின் முன்னெடுப்பில் இந்த



தருணத்திற்கு வெலிகம பிரதேச செயலாளர் சுமித் சாந்த, மாத்தறை மாவட்ட துணை பொலிஸ் அதிகாரி நினிது சேனாநாயக்க, வெலிகம பிரதான பொலிஸ் பரீட்சகர் லசந்த புத்திக போன்றோரும், HNB கிராமின் நிறுவனத்தின் பிரதான காரியாலய மற்றும் மாத்தறை கிளையின் அதிகாரிகளும் இத்தருணத்தில் கலந்து கொண்டனர்.



## நகரக்கிளையில் இரத்த தான முகாம்...

HNB கிராமின் பினான்ஸ் நிறுவனத்தின் நகரக்கிளையின் பொரள்ளை மத்திய நிலையத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்த தான வேலைத்திட்டம் கடந்த வாரம் பொரள்ளை வனாதமுல்ல பிரஜாசாலையில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 6.30 மணி வரை இடம்பெற்றது. மிகவும் வெற்றிகரமாக இடம் பெற்ற இந்த நிகழ்ச்சியின் பிரதேச மக்கள் கலந்து கொண்டதோடு HNB கிராமின் நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் பொரள்ளை மத்திய நிலைய உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்








## Happy Birthday

ஒக்டோபர் மாதத்திற்கான பிறந்த தினத்தை கொண்டாடும் எச் என் பி கிராமின் நிறுவனத்தின் சகோதர சகோதரிகளுக்கு எமது இதயம் கனிந்த இனிய பிறந்த நாள் வாழ்த்துக்கள்

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| [illegible] | [illegible] | [illegible] |

மெஹெவர
எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிடெட்
இல.16, நாவல வீதி, நுகேகொடை.
தொ.பே: 011 2176262 பெக்ஸ்: 011 2825843
மின்னஞ்சல்: manjula.p@hnbgrameen.lk
இணையம்: www.hnbgrameen.com

மேற்பார்வை: சமிந்த பிரபாத் முகாமைத்துவ பணிப்பாளர் / நிறைவேற்று அதிகாரி
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: நிலின திசாநாயக்க
அச்சு: அர்ஜுன கிரபிக்ஸ், ரத்னபிட்டிய
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க